# சுபீட்சம்

SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சுபீட்சம் மின்னிதழை பார்வையிட www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 02.05.2023 supeedsam.com supeedsam@gmail.com


# தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் தமிழ் அரசியல் கட்சிகள் பின்னடிப்பு

தமிழ் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் தமிழ் அரசியல் கட்சிகள் பின்னடிப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கட்சியின் மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார். நாட்டின் நீண்டகாலமாக இருக்கும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண இந்த ஆண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் இது மிகவும் முக்கியமானது எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அனைத்து சமூகங்களையும் உள்ளடக்கிய நியாயமான, புதிய போட்டித்தன்மையுள்ள மற்றும் நிலையான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது அவசியம் என்றும் கூறியுள்ளார்.

ஆகவே அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.



# இனப்பிரச்சினைக்கு தீர்வு காண இந்த ஆண்டு உடன்பாடு

இலங்கையிலுள்ள அனைத்து சமூகங்களுக்கும் நன்மை பயக்கும் கொள்கைகளுக்கு அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு இருப்பதாகவும் நாட்டின் நீண்டகாலமாக நீடிக்கும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இந்த ஆண்டு உடன்பாடு எட்ட எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது தொழிலாளர் தின உரையின் போது தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

# சஜித்துடன் பயணத்தை தொடர்வதற்கு நான் தயாரில்லை

## வடிவேல் சுரேஷ் எம்.பி அதிரடி



'பதுளை, மடுல்சீமை மக்களிடம் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச மன்னிப்புகோர வேண்டும். அவ்வாறு இல்லையேல் ஐக்கிய மக்கள் சக்தியுடன் பயணத்தை தொடர்வதற்கு நான் தயாரில்லை.' - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் மே தின கூட்டம் பதுளையில் நேற்று (01.05.2023) நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு தலைமைதாங்கி உரையாற்றுகையிலேயே வடிவேல் சுரேஷ் இவ்வாறு கூறினார்.

02 ஆம் பக்கத்தில்...

# இரவோடு இரவாக ஆக்கிரமிக்கப்பட்ட நிலம்!

## நடவடிக்கை எடுக்கத் தவறிய திணைக்களம்!

வவுனியா, கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழான குளத்து நீரேந்து பிரதேசத்தை கையகப்படுத்தி வேலி அமைக்கப்பட்டுள்ளது.

நேற்று இரவு குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழான பட்டாணிச்சூர் புளியங்குளத்தின் குருமன்காட்டுக்கு அண்மித்த மன்னார்

02 ஆம் பக்கத்தில்...

# அடுத்த ஆறு வருடங்களுக்குள் அனைவருக்கும் தங்களுக்கு உரித்தான காணி இருக்கும்!



அடுத்த வருடத்தில் சுற்றுலாத்துறையை அதிக வருமானம் ஈட்டும் துறைகளில் முதலிடத்திற்கு கொண்டு வர வேண்டும் என ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். அந்த சவாலை நான் ஏற்றுக்கொள்வேன் என காணி மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இன்று வரையில் காணி மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சினால் 2.5 பில்லியன் வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

02 ஆம் பக்கத்தில்...

# மீண்டும் குறையவுள்ள எரிவாயு விலை!

எரிவாயுவின் விலை இன்னும் அடுத்து வரும் சில தினங்களில் குறையும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

# கிழக்கில் தீவிரமடையும் டெங்கு தாக்கம்...! இருவர் உயிரிழப்பு..! 4300 நோயாளர்கள் பாதிப்பு..!

02 ஆம் பக்கத்தில்...


"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH

Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt

CEO

Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302

Fachmann für versicherung & vorsorge

Hauptstrasse 54

6015 Luzern

Switzerland

079 8000 100

arulnages@yahoo.com

finma :34598 25605: cicero





MATHE BILDUNGSZENTRUM

கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை

பள்ளித் தலமனைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN

076 431 83 79

mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல

Deutsch, Franzósisch, Englisch,Gymi Prüfung

BMS, HMS, FMS, Gymi Probe

அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்

Oerlikon, Uster, Schaffhausen



கலாநிதி எஸ்.அமலநாதனின் மணிவிழா நிகழ்வுகள் மட்டக்களப்பில் நடைபெற்றபோது மணிவிழா நாயகனுடன் இளைஞர் விவகார விளையாட்டுத்துறைஅமைச்சின் செயலாளர் க.மகேசன்,மட்டு முன்னாள் அரசதிபர் மா.உதயகுமார்,மட்டு அரச அதிபர் திருமதி க.பத்மராஜா, மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் ம.கோபாலரெட்ணம் ஆகியோரை படத்தில் காணலாம்.

# அரச ஊழியர்களின் சம்பளத்தை 20,000 ரூபாவால் அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்

(பாறுக் ஷிஹான்)

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் விலைவாசி உயர்வுக்கு ஏற்ப அரச ஊழியர்களின் சம்பளத்தை 20,000 ரூபாவால் அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை அரசாங்க பொது சேவைகள் சங்கத்தின் தலைவர் எஸ் .லவகுமார் தெரிவித்தார் .

அம்பாறை மாவட்டம் கல்முனை தனியார் விடுதியில் மே தினத்தை முன்னிட்டு நேற்று (01) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது

பொது நிர்வாக சுற்றறிக்கை 10/2000 க்கு அமைவாக கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ள அமைச்சுக்களில் தொழிற்சங்க பிரதிநிதிகளை உள்ளடக்கிய தான ஆலோசனைக் குழுக்களை தாவிப்பதன் மூலம் அவற்றின் காரியத்துரனையும் உற்பத்தி




பெருக்கத்தையும் மேம்படுத்த செய்தல் வேண்டும்

கிழக்கு மாகாணத்திற்கு உட்பட்ட ஊடகவியலாளர்களுக்கு அரச பேருந்துகளில் பயணிப்பதற்கான இலவச பஸ் பாஸ் நடைமுறையை அமுல்படுத்துமாறு மாகாண ஆளுநரை கோரல் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் கடமையாற்றும் பெண் அரச அலுவலர்களுக்கு மாதவிடாய் ஏற்படும் காலத்தில் ஒரு நாள் விசேட விடுமுறை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மகளிர் விவகார அமைச்சர் மற்றும் அரச நிர்வாக உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சரை கோரல்

மட்டக்களப்பு அம்பாறை திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள அரச சேவையாளர்களுக்கு என தனியான வீடமைப்பு திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு வீடமைப்பு அமைச்சை கோரல் வெளிக்கள கடமையில் ஈடுபடும் அரச சேவையாளர்களுக்கு கடந்த ஆட்சியின் போது சலுகை விலை அடிப்படையில் வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள் வழங்கும் திட்டத்தை அம்பாறை மாவட்டத்தில் வழங்காது புறக்கணிக்கப்பட்ட வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு கிடைக்கச் செய்வதற்கான உறுதிப்பாட்டை அரசாங்கம் உடனடியாக வழங்க வேண்டும்

அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் மேற்பார்வை தரத்திலான விசேட தர பதவியணியை ஏற்படுத்துவதன் மூலம் அச் சேவையினை வினை திறன் மிக்கதாக அரச நிர்வாகத்திற்கு பயனுள்ள வகையில் மாற்றி அமைக்க கோரல்.

ஆகியன உட்பட 14 அம்ச கோரிக்கைகள் இதன்போது முன்வைக்கப்பட்டதுடன் இலங்கை குடியரசின் ஜனாதிபதி பிரதமர் நிதி அமைச்சர், விட அமைப்பு அமைச்சர் மகளிர் விவகார அமைச்சர் ஆகியோர்களுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் இலங்கை அரசாங்கம் பொது சேவைகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஏ. புஹாது, பொருளாளர் க.நடராஜா, பிரதிப் பொதுச் செயலாளர் ஏ.சிபான், தாய் சங்க மத்திய குழு உறுப்பினர்களான பி.கோகுலோஜன், எஸ் எல். பசீல் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# குருக்கள்மடம் ஸ்ரீ கிருஷ்ணன் கோயில் கிருஷ்ண கீதம் இறுவட்டு வெளியீட்டு விழா

(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்டம் குருக்கள் மடம் ஸ்ரீ கிருஷ்ணன் கோயிலின் மூலமூர்;தியாகிய ஸ்ரீ கிருஷ்ணரைப் பற்றிய பாடல்கள் அடங்கிய கிருஷ்ண கீதம் எனும் இறுவட்டு வெளியீட்டு விழா ஞாயிற்றுக் கிழமை(30.04.2023) குருக்கள்மடம் கலைவாணி மகாவித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

விழாக்குழுத் தலைவர் க.ஞானரெத்தினம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஷண மிஷண சுவாமி ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்த ஜீ மகராஜ், சிவஸ்ரீ ச.மயூரவதனக் குருக்கள் சிவஸ்ரீ சோ. சோமேஸ்வரம் குருக்கள் ஆகியோரின் ஆசியுடன்,

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா, கிழக்கு மாகாண பொதுசமீ;சவை ஆணைக்குழுவின் செயலாளர் மூ.கோபாலரெத்தினம், கிழக்குப் பல்கலைக் கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் திருமதி புளோரன்ஸ் பாரதி கென்னடி மற்றும் கிராம பெரியோர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், கலைஞர்கள், சைவப் பெரியோர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டிருந்தனர்.

இறுவட்டின் பிரதிகள் இதன்போது அதிதிகளுக்கு வழங்கி வைக்கக்பட்டதுடன், இறுவட்டின் நயவுரையை கலாநிதி நிர்மலேஸ்வரி பிரஷாந்த் அவர்கள் நிகழ்த்தினார். இதன்போது குருக்கள்மடம் கிராமத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள், மற்றும் அதிதிகளுக்கும், விழாக்குழுவால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிலையில் குருக்கள்மடம் கலைவாணி மகாவித்தியாலயத்தின் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் அரங்கில் ஆற்றுகை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.



# காபட் வீதி போடப்பட்டும் இடை நடுவில் கைவிடப்பட்ட பாரிய பள்ளத் தாக்கு,போக்குவரத்துக்கும் இடையூறு

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தாயிப் நகர் கோயிலடி வைத்தியசாலை வீதியானது அண்மையில் காபட் இடப்பட்டு வீதி அமைக்கப்பட்டிருந்தது இதன் இடை நடுவில் சுமார் 100 மீற்றர் தூரம் அளவில் கல்வெட்டுக்கான இணைவெளியில் வீதி செப்பனிடப்படாமையால் பாரிய பள்ளதாக்கு ஏற்பட்டுள்ள நிலையில் அதன் ஊடாக பயணிப்பதில் பாரிய சிக்கல்களை எதிர் கொள்வதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதியானது கடந்த கோத்தபாய ராஜபக்ச அரசாங்கத்தின் கீழ் நாட்டை கட்டியெழுப்புவோம் சுபீட்சத்தின் பார்வையின் கீழ் ஒரு இலட்சம் வீதிகளை அமைத்தல் எனும் திட்டத்தில் அபிவிருத்தி செய்யப்பட்டது. ஆனாலும் தற்போது திருப்தியற்ற நிலை காணப்படுகிறது.

இவ் வீதியானது 3000மீற்றர் நீளம் கொண்டது இதன் ஊடாக



நாளாந்தம் பலர் பயணிக்கிறார்கள் வைத்தியசாலை,பாடசாலை,அலுவலக தேவை என பல நூற்றுக்கணக்கான மக்கள் இவ் வீதியையே பயன்படுத்துகிறார்கள் பல வருட காலமாக குண்டும் குழியுமாக காணப்பட்ட இவ் வீதி தார் வீதியாக அபிவிருத்தி செய்யப்பட்ட போதிலும் இடை நடுவில் சிறிய மதகு க்கான அபிவிருத்தி திட்டம் நடை முறைப்படுத்தப்படவில்லை .மாரி மழை காலங்களில் இதன் ஊடாக முற்றாக பயணிக்க முடியாத நிலை ஏற்படும் வெள்ள நீர் இதன் ஊடாகவே பாய்வதனால் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படும் வீதியின் இருபுறமும் வயல் நிலங்களாகையால் விரைவு செப்பனிட வேண்டிய தேவை உள்ளது. இது தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின்

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,திருகோணமலைக்கு தகவல் அறியும் உரிமை சட்டம் மூலம் இது தொடர்பில் விளக்கம் கோரப்பட்ட நிலையில் 'நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக இப் பால புனரமைப்பு பணி கைவிடப்பட்டுள்ளதாகவும் இவ் வீதிக்கான மொத்த ஒதுக்கீடு 90,686,482.38 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் மொத்த செலவு 70,0666,181.07 ரூபாவாக காணப்படுவதாகவும் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இருந்த போதிலும் இவ்வாறு பல இலட்சம் ரூபா செலவு செய்து காபட் இடப்பட்ட வீதியின் முழுமையான பூரணமற்ற நிலை பல மாத காலமாக காணப்படுவது அபிவிருத்தியில் திருப்தியற்றதும் மக்களின் சீரான போக்குவரத்துக்கான திருப்தியற்ற நிலையும் காணப்படுகிறது. மேலும் இவ் வீதிக்கான பெயர் பலகை இடப்படாமையும் குறைபாடாக உள்ளது இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி குறைபாடுகளை நிவர்த்திக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## மீண்டும் குறையவுள்ள எரிவாயு விலை!

இந்தத் தகவலை ஜனாதிபதி அலுவலகத்தின் பிரதானியும், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகருமான சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெறும் ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் உரையாற்றிய போது இதனைத் தெரிவித்தள்ளார். நேற்று நள்ளிரவு முதல் எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ள நிலையில், இந்த அறிவிப்பு வெளியாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அடுத்த ஆறு வருடங்களுக்குள் அனைவருக்கும்

அதனால் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதிகள் மட்டுமே நமக்குப் போதுமானதல்ல எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்கால சந்ததிக்காக நல்லதொரு நாட்டினை உருவாக்க வேண்டும் என்பதே அவரது நோக்கமாகும். அதற்காக அவர் 2048 யும் வெற்றிகொள்வார். இவற்றை நமக்காகவே செய்கிறார்.

இதற்கு ஒரு வருடத்திற்கு முன்னதாக காணப்பட்ட நிலைமையை தலைகீழாக மாற்றியவரும் அவரேயாவார். எதிர்க் கட்சிகளுக்கு ஆர்ப்பாட்டங்களை செய்வது மாத்திரமே நோக்கமாக இருந்தாலும் 2048 அடுத்த சந்ததிக்கான அபிவிருத்தி அடைந்த நாட்டினை உருவாக்குவதே எமது நோக்கமாகும். ஐக்கிய தேசிய கட்சியை ஒருவராலும் வீழ்த்த முடியாது. அதனால் அடுத்த ஆறு வருடங்களுக்குள் இந்நாட்டவர் அனைவருக்கும் தங்களுக்கு உரித்தான காணி இருக்கும் என்பதை நான் உறுதியளிக்கிறேன்.

அதற்காக நமது நாட்டின் தொழிலாளர்களை தொழில் முயற்சியாளர்கள் ஆக்க வேண்டியது அவசியமாகும். நாம் இறந்துவிட்டாலும் நமது பிள்ளைகள் வாழ்வர் என்பதால் 2048 ஆம் ஆண்டு இலக்கை வெற்றிகொள்ள முடியும் என்றார்.

## இனப்பிரச்சினைக்கு தீர்வு காண இந்த ...

தனது முயற்சி அரசியலன்றி நாட்டின் பொருளாதாரத்தை சரியாக நிர்வகித்து மக்கள் மீதான சுமையை குறைப்பதே என்றும் நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான பலம் தனக்கு இருப்பதாகவும் அதற்காக ஒத்துழைக்கும் அமைச்சர்களுடன் இணைந்து செயற்பட முடியும் என்ற நம்பிக்கையினால் தான் ஜனாதிபதி பதவியை ஏற்றுக்கொண்டதாகவும் ஜனாதிபதி தனது மே தின உரையில் குறிப்பிட்டார் .

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டம், கொழும்பு, சுகததாஸ உள்ளக அரங்கில் நடைபெற்று வருகின்றது. சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், சுதந்திரம் அடைந்து நூற்றாண்டை அடையும் 2048 ஆகும் போது இந்தியா 2047 இலும் சீனா 2049 இலும் சாதிக்க எதிர்பார்ப்பது போன்று அபிவிருத்தியடைந்த பொருளாதாரம் கொண்ட நாடாக மாறுவதே இலங்கையின் இலக்காக இருக்க வேண்டும் எனவும் ''2048 இலங்கைக்கு அபிவிருத்திக்கான ஆண்டாகும் என்பதோடு தற்போதைய சந்ததியினருக்காக மட்டுமல்லாது எதிர்கால இளைஞர்கள் மற்றும் குழந்தைகளுக்காகவும் தான் இந்த நாட்டை கட்டியெழுப்புகிறோம். என்றார்.

## கிழக்கில் தீவிரமடையும் டெங்கு தாக்கம்...!

கிழக்கு மாகாணத்தில் டெங்கு நோயினால் ஏப்ரல் மாதம் மாத்திரம் இருவர் உயிரிழந்துள்ளதாகவும், ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை 4300 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் கிழக்கு மாகாண தொற்று நோயியல் நிபுணர் எஸ். அருள்குமரன் தெரித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் டெங்கு நோய் பரவல் தொடர்பில் கேட்ட போதே அவர் இவ்விடயத்தை குறிப்பிட்டார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

திருகோணமலை மாவட்டத்தில் ஒரு மரணமும், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு மரணமும் கடந்த ஏப்ரல் மாதம் ஏற்பட்டுள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது கிழக்கு மாகாணத்தில் இந்த வருடம் முதல் நான்கு மாதங்களிலும் அதிகூடிய டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டார்கள். கடந்த மாதம் ஏப்ரல் மாதம் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு மரணம் திருகோணமலை மாவட்டத்தில் ஒரு மரணம் உட்பட இரண்டு மரணங்களும்,4300ற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளிகளும் இனம் காணப்பட்டுள்ளார்கள்.

அதில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 1800க்கும் மேற்பட்ட நோயாளிகள் இனங்காணப்பட்ட நிலையில் கடந்த மாதம் மட்டும் 600 நோயாளிகள் இணங்காடப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் திருகோணமலை மாவட்டத்தில் மார்ச் மாதம் 600க்கும் மேற்பட்ட நோயாளர்களும் ஏப்ரல் மாதத்தில் 700 க்கும் மேற்பட்ட நோயாளர்களும் இனங் காணப்பட்டுள்ளதுடன் திருகோணமலை நகரம்,உப்புவெளி மற்றும் குச்சவெளி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்குட்பட்ட பகுதியில் அதிகளவிலான டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதாகவும் கிழக்கு மாகாண தொற்று நோயியல் நிபுணர் எஸ்.அருள்குமரன் மேலும் குறிப்பிட்டார்.

அத்துடன் கிணற்றில் டெங்கு குடம்பிகளை தடுப்பதற்காக வேண்டி கப்பீஸ் என்று அழைக்கப்படும் மீன்கள் காணப்படுகின்றது.

அதனை நீங்கள் உங்களுடைய பொது சுகாதார பரிசோதனைகளிடம் கேட்டு பெற்றுக் கொள்ளுமாறும், சீமெந்து தொட்டிகளை முற்றாக அகற்றுமாறும் கிழக்கு மாகாண தொற்று நோயியல் நிபுணர் எஸ். அருள்குமரன் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## இரவோடு இரவாக ஆக்கிரமிக்கப்பட்ட நிலம்

வீதி ஓரமாகவுள்ள நீரேந்து பிரதேசத்தை ஆக்கிரமித்து சில நபர்களால் கம்பி கட்டை போடப்பட்டு வேலி அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த நீரேந்து பகுதியில் உள்ள பள்ளி வாசல் ஒன்றினை அண்மித்தே வேலிகள் அமைக்கப்பட்டு வருகின்றது.

ஏற்கனவே, அப்பகுதிக்கு அண்மையாக ஒரு பெண் தனது வீட்டினை அண்மித்த காணித் துண்டம் ஒன்றினை வேலியிட்டு அடைத்த போது கமநல அபிவிருத்தி திணைக்களத்தினர் ஜேசிபி இயந்திரத்துடன் சென்று வேலிகளை அகற்றியதுடன், அப் பெண்ணுக்கு எதிராக முறைப்பாடு செய்திருந்தனர்.

ஆனால், தற்போது, இரவோடு இரவாக குறித்த பகுதியில் கம்பி வேலி அமைக்கப்பட்டு நிலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள போதும் உரிய திணைக்களம் நடவடிக்கை எடுக்கவில்லை என மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

## சஜித்துடன் பயணத்தை தொடர்வதற்கு நான் தயாரில்லை

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு, 'நாட்டில் தேசிய கொள்கைத் திட்டம் பற்றி பேசப்படுகின்றது. அவ்வாறு கொள்கைத் திட்டங்கள் வகுக்கப்படும் போது மலையக பெருந்தோட்ட மக்கள் ஓரங்கட்டப்படுகின்றனர். இந்நிலைமையை இனியும் அனுமதிக்க முடியாது. எமது மக்களும் இலங்கை பிரஜைகள்தான். அவர்களுக்கு எதற்காக ஓரவஞ்சணை காட்டப்படுகின்றது? இலங்கை மக்கள் அனுபவிக்கும் அத்தனை உரிமைகளும் எமது மக்களுக்கும் வேண்டும்.

எமது மக்கள் பயங்கரவாதிகள் அல்லர். பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டவில்லை. நாட்டின் வன்முறைகளில் ஈடுபட்டதில்லை. நாடு மேம்பட உழைத்த அவர்களுக்கு ஏன் புறக்கணிப்பு? இன்னும் காணி உரிமை அற்றவர்களாக வாழ்கின்றனர்.

எங்கள் மக்களுக்கு உண்ண உணவில்லை, பாதுகாப்பாக வாழ காணி இல்லை. மக்கள் இப்படி தவிக்கையில் எனக்கு கட்சி, சின்னம் என்பன முக்கியம் இல்லை.

தற்போதைய சூழ்நிலைக்கமைய நாட்சம்பளமாக 3 ஆயிரத்து 250 ரூபா வழங்கப்பட வேண்டும். பேராதனை பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வில் இது தெரியவந்துள்ளது. எனவே, அந்த தொகையை வழங்குமாறு கம்பனிகளுக்கு ஜனாதிபதி கட்டளையிட வேண்டும்.

அதேவேளை, எமது மக்களை செல்லாக் காசாக கருத வேண்டாம் என எமது கட்சி தலைவர் சஜித்திடம் கூறுகின்றேன். அவர் மடுல்சீமை கூட்டத்துக்கு வரவில்லை. ஆக மடுல்சீமைக்கு வந்து அவர் மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும். இல்லையேல் சஜித்துடன் எனது பயணம் தொடராது.' - என்றார்.

# மட்டக்களப்பில் நடைபெற்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் மே தின கூட்டம்



















Japan Pacific
marketing pvt ltd cycle
உதிரிபாகங்கள்,
cycle உதிரிபாகங்கள்,
முழுமையான cycle தொகையாக
விற்பனைக்கு உண்டு .
ஓட்டமாவடி,
வாழைச்சேனை
தொடர்புகளுக்கு
0777197004

# பிரதான கட்சிகளின் மே தினக் கூட்டங்கள்



























# தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மே தின நிகழ்வு








தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினால் மட்டக்களப்பு களுதாவளை பொது மைதானத்தில் நடாத்தப்பட்ட சர்வதேச தொழிலாளர் தின நிகழ்வுகள். ( ரக்ஸனா)

# மட்டக்களப்பில் கோலாகலமாக இடம்பெற்ற சித்திரை வசந்தம்- ௨௦௨௩




























# மட்டக்களப்பில் கோலாகலமாக இடம்பெற்ற சித்திரை வசந்தம்- 2023





























**(உ.உதயகாந்த்)**

தமிழ் சிங்கள சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட செயலகம் மற்றும் இலங்கை பொலிஸ், இலங்கை இராணுவம், மட்டக்களப்பு பாடுமீன் லயன்ஸ் கழகம் ஆகியன இணைந்து நடாத்திய சித்திரை வசந்தம் - 2023 ஞாயிற்றுக்கிழமை (30) திகதி

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.கலாமதி பத்மராஜா தலைமையில் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் இடம்பெற்றது.

இதன்போது பல்வேறு பாரம்பரிய விளையாட்டு நிகழ்ச்சிகளும், மாலை நேர இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வானது காலை 6.30 மணியளவில் காந்திப்பூங்காவில் இருந்து இருபாலாருக்குமான சைக்கிள் ஓட்டமும் மரதன் ஓட்டமும் , காலை 8.30 மணிக்கு முகத்துவாரத்தில் இருந்து மட்டக்களப்பு நுழைவாயில் வரையிலான தோணி ஓட்டமும், நீச்சல் அஞ்சல் ஓட்டமும் (கலப்பு), பிற்பகல் 2 மணி தொடக்கம் வழுக்கு மரம் ஏறுதல், தலையணைச்சமர், முட்டி உடைத்தல் புதுவருட அழகன் மற்றும் அழகி போட்டி போன்ற சுவாரஸ்யம் நிறைந்த போட்டி நிகழ்வுகள் பார்ப்போரைக் கவர்ந்தன.

அத்தோடு உள்ளூர் வியாபார முயற்சியாளர்களின் கண்காட்சியும் விற்பனையும் வெபர் விளையாட்டு மைதானத்தில் பிரதம அதிதிகளினால் திறந்துவைக்கப்பட்டது.

இதில் பாரம்பரிய உணவுக் கூடங்கள் மற்றும் உள்ளூர் சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளின் கண்காட்சி மற்றும் விற்பனை கூடங்கள் என்பனவும் அமைக்கப்பட்டிருந்தன.

கிடுகு இழைத்தல், கோலம் போடுதல், சைக்கிள் மெதுவோட்டம் (50 வயதுக்கு மேல் ஆண்), யானைக்கு கண் வைத்தல், சாக்கோட்டம், பெண்களுக்கான தேங்காய் துருவுதல், தேசிக்காய் சமநிலை ஓட்டம், ஊசிக்கு நூல் கோர்த்தல், போத்தலில் நீர் நிரப்புதல், சிறுவர்களுக்கான மிட்டாய் ஓட்டம், பலூண் உடைத்தல், சங்கீதக் கதிரை (பெண் உத்தியோகத்தர்கள்), தொப்பி மாற்றுதல் (ஆண் உத்தியோகத்தர்கள்), கயிறு இழுத்தல் - பொலிஸ் மற்றும் இராணுவம் (ஆண்) பொலிஸ் மற்றும் மாவட்ட செயலகம் (பெண்), கிராமியப்பாடல் (35 வயதுக்கு மேற்பட்டோர்), புத்தாண்டு அழகன், அழகி போட்டிகள் போன்றவை மாலை நேர விளையாட்டுக்களாக இடம்பெற்றதனைத் தொடர்ந்து பரிசளிப்பு நிகழ்வும் அதனைத் தொடர்ந்து மட்டுநகர் சுப்பர் சங்கீர்த் இசைக்குழுவின் பிரபல பாடகர் மகிந்தகுமார் உள்ளிட்ட கலைஞர்களின் பங்கேற்புடன் வழங்கிய அட்டகாசமான இசை நிகழ்ச்சி, வரவேற்பு நடனம், ஆடல், பாடல் என பல்வேறுபட்ட சிறப்பு நிகழ்ச்சிகளுடன் மாவட்ட செயலக சித்திரை வசந்தம் - 2023 நிகழ்ச்சி கோலாகலமாக இடம்பெற்று நிறைவுற்றது.

போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றியீட்டியவர்களுக்கு பெறுமதிமிக்க பணப்பரிசில்களும் அதிதிகளினால் வழங்கிவைக்கப்பட்டது.

இந்நிகழ்வுகளில் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் கே.மகேசன், முன்னாள் மாவட்ட அரசாங்க அதிபர்களான சீ.புண்ணியமூத்தி, எம்.உதயகுமார், 231 வது படைப்பிரிவின் பிறிகேட் கொமாண்டர் திலீப பண்டார, மட்டக்களப்பு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர்(Dig) உஜித் என்.பீ.லியனகே, உதவி பொலிஸ் அத்தியட்சகர் (மட்டக்களப்பு - ஐ) எம்.ஏ.கே.பண்டார, மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரி சரத்சந்திர, மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்களான திருமதி.சுதர்சனி ஸ்ரீகாந்த், நவரூபரஞ்ஜினி முகுந்தன் (காணி), மாவட்ட செயலக உத்தியோகத்ர்கள், பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், மட்டக்களப்பு பாடுமீன் லயன்ஸ் கழக பிரதிநிதிகள், வர்த்தக பிரதிநிதிகள், கோட்டமுனை விளையாட்டு கழக பிரதிநிதிகள், உள்ளிட்ட சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பெருமளவான போட்டியாளர்களும், பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

## சொல்லத் துடிக்குது மனசு: 11

# பிதிர் வழிபாடு

*நம்மோடு வாழ்ந்து நம்முடன் கலந்திருந்து*
*நம் இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு கொண்டு*
*நமைவிட்டுப் பிரிந்து விண்ணுலகு சென்ற*
*நம் பிதிரர்களுக்குப் பிதிர் கடன் செய்வோம்*

பண்டைய காலம் முதல் இறந்த ஆத்மாக்களின் சாந்தி (மோட்சம்) வேண்டி பல்வகைப்பட்ட வழிபாடுகள் நடந்து கொண்டு வருகின்றன. இவ்வழிபாடுகள் ஆதிகால வேடுவ சமூகத்தில் இருந்து ஆரம்பித்து இன்றுவரை தொடர்வதாக அறிய முடிகின்றது. இந்துக்கள் இறந்த ஆத்மாக்களைப் பிதிரர்கள், உத்தியாக்கள், தென்புலத்தார், மேலோகத்தார் என்றெல்லாம் அழைக்கின்றனர். நம்மோடு வாழ்ந்து, கூடிக் குலாவி இருந்து, நம்மைவிட்டுப் பிரிந்து சென்ற இறந்த ஆத்மா (ஆன்மா)க்களின் நற்கதி வேண்டிச் செய்யப்படுவதே பிதிர் வழிபாடு எனப்படுகிறது. இவ்வழிபாடு பெரும்பாலும் புரட்டாதி மாதத்தில் நிகழ்த்தப்படுகிறது. சில இடங்களில் இறநத நாள் திதியை அடிப்படையாகக் கொண்டு கார்த்திகை மாதத்திலும் இந்துக்களால் மேற்கொள்ளப்படுகின்றது. அதிலும் புரட்டாதி மாதம் மஹாளய(மாளய) பட்ச காலம் பிதிர் வழிபாட்டுக்குச் சிறப்பான காலமாகக் கொள்ளப்படுகிறது. இருந்தும் புரட்டாதி மாதம் முழுவதும்பிதிர் கடனிறுத்தல் வழிபாட்டு நிகழ்வுகள் பெரும்பாலான இந்துக்களின் வீடுகளில் நடத்தப்பட்டு வருகின்றன. பிதிர் வழிபாடு தமது பிறப்புக்கும் நல்வாழ்வுக்கும் காரணமாக இருந்து நம்மைவிட்டுப் பிரிந்து இறைபதம் அடைந்த பிதிரர்களுக்குச் செய்யப்படும் பிதிர் உபகாரம் என்பதனால் இதனைக் கடன் கழித்தல் எனவும் இந்துக்கள் கூறுகின்றனர். இதனை பல இந்துக்கள் மெய் அன்போடும், பயபக்தியோடும் வருடந்தோறும் நிறைவேற்றி வருகின்றனர்.

பிறப்புக்கும், இறப்புக்கும் இடைப்பட்டதே சகல உயிரினங்களுக்கும் உரித்தான வாழ்க்கையாகும். இந்த வாழ்க்கையைத் தமக்கு விதிக்கப்பட்டபடி ஒவ்வொரு உயிரினங்களும் வாழ்ந்து கழித்து மடிகின்றன. ஆறறிவுள்ள மனிதனைப் பொறுத்தவரையில், பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் உலக போகங்களில் ஈடுபட்டு, பந்தம், பாசம், இன்பம், துன்பம், துயரம், நோய், மகிழ்ச்சி, சந்தோசம் அனைத்தையும் அனுபவித்து வாழ்ந்து மடிகின்றனர்.

இந்துக்கள் முற்பிறவியில் அவரவர் செய்த வினைப் பயன்களுக்கு ஏற்பவே மறுபிறப்பு எடுக்கின்றனர் என இந்துக்களில் பெரும்பாலானோர் நம்புகின்றனர். இந்நம்பிக்கை பண்டு தொட்டுப் பரவலாக இருந்து வருகிறது. இதனைக் வேதாந்தம் கன்மம், மறுபிறப்புக் கோட்பாடு சிறப்பாக வலியுறுத்துகின்றது. கருட புராணம் ஒருவர் செய்த பாவம், வினை, செயல் என்பவற்றுக்கு ஏற்ப தண்டனை எவ்வாறு வழங்கப்படுகிறது என்பதை வலியுறுத்துகின்றது. சித்திர புத்திர நாயனார் புராணம் (சித்திரைக் கதை) ஒருவர் வாழும் போது செய்த நல்வினை, தீவினை(பாவக் கணக்கு)களின் அடிப்படையில் தண்டனை வழங்கப்படுகிறது எனக் கூறுகிறது. கன்மம், மறுபிறப்புக் கோட்பாடு இப்பிறவியில் ஒருவர் செய்த வினைகளுக்கு ஏற்பவே அவர் மறுபிறப்பெடுக்கின்றார் எனத் தெளிவாகக் கூறுகின்றது. இதனைப் புராண, இதிகாசங்கள், திருமுறைகள், சைவ சித்தாந்த சாத்திர நூல்கள், அர்த்த சாத்திரம், காப்பிய நூல்கள், சங்கமருவிய காலத்தில் தோன்றிய திருக்குறள் உட்படப் பல நூல்கள், நீதி நூல்கள் ஆகியன பதி, பசு, பாசம், மும்மலங்கள், ஆன்மாக்கள், கன்ம வினை, மறுபிறப்புப் பற்றியெல்லாம் விரிவாகக் கூறுகின்றன. இதனைச் சிலப்பதிகாரம் அறம் பிழைத்தோர்க்கு அறம் கூற்றம் ஆவதும் ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும் எனவும் கூறிக் கதையை நகர்த்திச் செல்கின்றது. மாணிக்கவாசக சுவாமிகள் சிவபுராணத்தில் இன்னும் ஒருபடி மேலே சென்று புல்லாகிப் பூண்டாய் புழுவாய் மரமாகி பல்மிருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி என இறந்த ஆத்மாக்கள் ஊழ்வினைப்படி மறுபிறப்பில் எடுக்கும் பிறப்புக்கள் பற்றித் தெளிவாகக் கூறுகின்றார். இவ்வாறு மறுபிறப்பெடுத்து வாழ்ந்து மறைந்த ஆன்மாக்களின் பிதிர் கடன் வழிபாடு பற்றியதே இக்கட்டுரையாகும்.

வீட்டுத் தலைவன் அல்லது உறவினர் (ஆண்) அல்லது பூசாரி ஆகியோரில் ஒருவர் பிதிர் வழிபாட்டினைச் செய்வதாயின் மாலை ஆறு மணிக்கும் ஏழு மணிக்கும் இடையில் செய்வது உத்தமமாகும். எட்டு மணிக்குள் வழிபாடு செய்வது மத்திமமாகும். எட்டு மணிக்குப்



**சோலையூர்க் குருபரன்**



பிறகு செய்வது அதர்மமாகும். எட்டு மணிக்குப் பின்னர் பிதிர் வழிபாடு செய்வதைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். பிதிர்கடன் வழிபாட்டினைப் பிறரைக் கொண்டு செய்வதைத் தவிர்த்து குடும்பத்தார் நிறைவேற்றுவதே சிறந்ததாகும். மரபு, சமய, சம்பிரதாயங்களுக்கு உட்பட்டு நமது பிதிரர்களுக்கு உரிய முறைப்படி பிதிர் வழிபாட்டினை நிறைவேற்றுதல் வேண்டும். ஐயரையோ, பூசாரியையோ கொண்டு வழிபாட்டினைச் செய்யும்போது நமது முறைப்படி படையல் வைக்கும் சம்பிரதாயம் மாற்றப்பட்டு அவர்களின் விருப்பப்படியே சகலமும் நிறைவு செய்யப்படும்.

பிதிர் வழிபாடு செய்வதற்கு ஒரு தினம் தீர்மானிக்கப்பட்டால் அத்தினத்தை எக்காரணம் கொண்டும் மாற்றக் கூடாது என முன்னோர் அறுதிபடக் கூறுவர். அன்றைய தினத்தில் செய்யப்படும் பிதிர் கடனை ஏற்றுக் கொள்வதற்காகத் தாய், தந்தையர், சகோதரங்கள், உறவினர்கள், சுற்றத்தார், விண்ணுலகில் அவர்களோடு இணைந்த



கொண்ட நண்பர்கள், ஏனையோர் எல்லோருமாக இணைந்து வருவார்களாம். அன்றைய தினத்தில் ஏதோ ஒரு காரணத்துக்காகப் பிதிர் கடன் செய்வது தடைப்பட்டால் அன்றைய தினம் வருகைதரும் பிதிரர்களுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டு , இறுதியில் தாய், தந்தை, சகோதரங்கள், உறவினர்கள் எல்லோரும் சேர்ந்து ஏழு தலைமுறைக்குச் சாபமிட்டுச் செல்வார்கள் என்பது அம் மக்களால் நம்பப்பட்டுவரும் ஒரு நம்பிக்கையாகும். இதன் அடிப்படையிலேயே இருப்பதைக் கொண்டு பயபக்தியோடு குறித்த தினத்தில் பிதிர் கடனைச் செய்து முடிப்பதாகப் பலரும் கூறுகின்றனர்.

புரட்டாதி மாதத்தில் பிதிர் வழிபாடு செய்வதற்கான திகதி தீர்மானிக்கப்பட்டதும் அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பிப்பார்கள். தூசு தட்டி ஒட்டறை அடித்தல், வீடு, வளவு சுத்தம் செய்தல், கழுவுதல், சாணம் இட்டு மெழுகுதல் போன்ற செயற்பாடுகள் நடைபெறும். மட்பாண்ட பாத்திரங்கள் சேகரித்தல், மிளகாய்த்தூள் இடித்தல், நெல் குற்றுதல், பால் காய்ச்சி உறையிடல்(தயிர்) ஆகிய செயற்பாடுகள் முன்னைய தினங்களில் நடந்து முடிந்திருக்கும். பிதிர் வழிபாட்டுக்குரிய ஏனைய பொருட்களான ஏழு மரக்கறி வகைகள், பழ வகைகள் கொள்வனவு, வாழை இலை, பூ வகைகள் சேகரித்தல், அரிசிமா இடித்தல் ஆகியன செயற்பாடுகள் அன்றைய தினமே நிறைவேற்றப்படும். மடைகளுக்குரிய படையல் அவிபாகப் பொருட்கள் பகல் வேளையில் தயாரிக்கப்படும். சோறு சமைத்தல், ஏழு மரக்கறி வகைகள் சமைத்தல், கிழங்கு வகை அவித்தல், பலகார வகைகள் சுடல், கூள் காய்ச்சுதல், துள்ளுமா தயாரித்தல், சில இடங்களில் மோதகம், கொழுக்கட்டையும் அவிப்பர், பயறுச் சுண்டல் (பயறு, மிளகு, சீனி, தேங்காயத் தலைப்பால் ஆகியன கொண்டு உரலில் துவைத்துத் தயாரிக்கப்படும் சுண்டல்) தயாரித்தல் ஆகிய செயற்பாடுகள் உறவுக்காரப் பெண்களால் மும்முரமாக நிறைவேற்றப்படும். சகல செயற்பாடுகளும் பயபக்தியோடு மேற்கொள்ளப்படும். இதுவும் ஊர் ஒற்றுமையின் அடையாளமாகக் கைக்கொள்ளப்பட்டன.

படையலுக்கெனத் தயாரிக்கப்பட்ட அவிபாகப் பொருட்களைப் பூசை அறையில் கொண்டு சென்று வைப்பார்கள். மாலை ஆனதும் வீட்டுத் தலைவன் அல்லது பூசாரி பூசைக்குரிய வேலைகளை ஆரம்பிப்பர். மடையும் படையலும் வைக்கும் இடத்தில் பாய், வெள்ளைத் துணி விரித்து, விளக்கு வைத்து, நிறைகுடமும் வழமையான மடை ஒன்றும் வைப்பார்கள். மடைக்கும் கும்பத்துக்கும் கற்பூர தீபம், தூபம் காட்டி வழிபடுவார்கள். விரிக்கப்பட்ட வெள்ளைச் சீலையின்மேல் தலைவாழை இலை ஐந்து எடுத்து விரிப்பர். தண்ணீர் தெளித்து கும்பத்துக்கும் மடைக்கும் முன்னால் ஐந்து படையல்கள் வைக்கப்படும். இப்படையலைக் 'கல்லை' எனவும் அழைப்பர். இதில் மத்தியில் வைக்கப்படும் கல்லையைப் பொதுக் கல்லை எனவும் அழைப்பர். பொதுக் கல்லைக்கு வலது புறமாக உள்ள முதல் கல்லை தந்தையின் தந்தைவழிப் பிதிரர்களுக்கும், அடுத்தது, தந்தையின் தாய்வழிப் பிதிரர்களுக்கும், பொதுக் கல்லையின் இடப்புறமாக உள்ள முதல் கல்லை தாயின் தாய்வழிப் பிதிரர்களுக்கும், அடுத்த இறுதிக் கல்லை தாயின் தந்தைவழிப் பிதிரர்களுக்கு உரியது எனவும் குறிப்பிடுவர். இந்த அடிப்படையிலேயே மரபு, சம்பிரதாயம் பேணும் வகையில் மட்டக்களப்பு இந்துக்களின் பெரும்பாலான வீடுகளில் கல்லை வைக்கப்படுகின்றன. பிதிர் கடன் வழிபாட்டினைக் 'கல்லைக்கு வைத்தல் வழிபாடு' எனவும் பலர் அழைக்கின்றனர்.

இன்னும் சில பிரதேசங்களில் மடைக்கு முன்னால் ஐந்து வாழை இலை விரித்து ஐந்து கல்லை வைப்பார்கள். கும்பத்தின் வலப் புறமாக இருந்து இடப்புறம் நோக்கிக் கல்லைகள் வைக்கப்படும். வலப்புறமாக வைக்கப்புடும் முதலாவது கல்லை விஷ்ணுவுக்கும், இடப் புறமாக இரண்டாவதாக வைக்கப்படும் கல்லை தாய், தந்தையருக்கும், மூன்றாவதாக வைக்கப்படும் கல்லை சகோதர, சகோதரிகளுக்கும், நன்காவதாக வைக்கப்படும் கல்லை உறவினர், இன, சனங்களுக்கும், இடப்பக்கம் ஐந்தாவதும் இறுதியுமாக வைக்கப்படும் கல்லை நமது பிதிரர்களோடு இணைந்துவரும் விண்ணுலகப் பிதிரர்களுக்குமாக வைக்கப்படுகிறது. கல்லைகளை வைக்கும்போது உறவுமுறை குறித்து வைப்பது உத்தமமாகும் என நமது முன்னோர் குறிப்பிடுவர். இன்னும் சில இடங்களில் மூன்னு கல்லைகள் வைக்கப்படுகின்றன. மத்தியில் பொதுக் கல்லையும், அதற்கு வலப்புறமாக வைக்கப்படும் கல்லை தந்தை, நமது சகோதர ஆண் உறவுகளுக்கும், தந்தை வழி உறவுகளுக்கும், இடப்புறமாக வைக்கப்படும் கல்லை தாய், தாய்வழி உறவுகளுக்கும், சகோதரிகளுக்குமாக உறவுமுறை சொல்லி வைக்கப்படும்.



கல்லையில் வைக்கப்படும் அவிபாகம் மற்றும் பொருட்களாக சோறு, பொரியல் (வாழை, கிழங்கு, அப்படம்), ஏழு மரக்கறிவகை (சுண்டல், கடையல், குளம்பு, சொதி), தயிர், சீனி, கூள், துள்ளுமா, பயறுச் சுண்டல், உரித்த வாழைப்பழம், பலகார வகைகள் (அரிசிமா சீனிப் பலகாரம், சர்க்கரை, முந்திரி, கச்சான்(நிலக்கடலை) பலகாரங்கள், வாரப்பம்), பழவகைகள்(பிதிரர்கள் விரும்பி உண்டு களித்த பழங்கள்) தேநீர், வெற்றிலை, பாக்கு வட்டா, சிகறேட், பீடி, சுருட்டு, சோடா(மென்பானம்), மதுபானம், இனிப்புப் பண்டங்கள், பிஸ்கேற் வகைகள், தேங்காய் எண்ணெய், பூ வகைகள், தேங்காய்ப்பூ தண்ணீர் செம்பு ஆகியவற்றைக் கல்லைகளிலும் கல்லைக்கு அருகிலும் வைப்பார்கள்.

பூசை அரம்பித்து முடிந்ததும், விளக்குத் தவிர மின்குமிழ்களை அணைத்து, வாசற் கதவினை சிறிதளவு திறந்தவாறு மூடிவிட்டு எல்லோரும் வெளியே சென்று அமைதியாக அமர்ந்ருப்பார்கள். அரை மணி நேரத்துக்குள் பல்லி கீச்சிட்டதும்(சொல்லியதும்) எல்லோரும் பூசை அறைக்குள்ளெ வருவார்கள். அகால மரணமடைந்த ஆத்மாக்கள் வீட்டுக்குள்ளே வரமாட்டார்கள் என்பதனால் பாத்திரமொன்றில் இலைபோட்டுச் சகல கல்லைகளிலும் இருந்து அவிப் பொருட்களைக் கிள்ளி எடுத்து, நீர், தாம்பூலம், எரிய வைத்த விளக்குத் திரி ஆகியவற்றுடன் வெளியே சென்று கடப்படியில் வைத்து வழிபட்ட பின்னர் உள்ளே வருவார்கள். சில இடங்களில் அகால மரணமடைந்த ஆத்மாக்களுக்குத் தனிக் கல்லையும் வைத்துக் கொண்டு சென்று வைப்பார்கள். சுவாமி அறைக்குள் வந்ததும் தேவாரம் பாடி, தீபம், தூபம் காட்டிப் பூப்போட்டுத் தண்ணீர் தெளித்து பிதிர் கடன் வழிபாட்டினை நிறைவு செய்வார்கள். சகலருக்கும் திருநீறு, சந்தணம் வழங்கப்பட்ட பின்னர் கல்லைகள் உரிய முறைப்படி, உரிய உறவுகளுக்கு வழங்கப்படும். சில இடங்களில் கல்லைகளை உறவினர்கள் அமர்ந்திருந்து உண்பார்கள். அன்றைய தினம் வருகைதந்த உறவினர்களுக்கும் மற்றையோருக்கும் அவிபாக உணவு வழங்கப்படும். பெரும்பாலான வீடுகளில் இவ்வழிபாட்டினை வீட்டுத் தலைவர்களே மேற்கொள்கின்றனர். இவ்வழிபாடு பெரும்பாலும் மௌன வழிபாடாகவே அமைந்திருக்கும். இவ்வழிபாட்டினை பயபக்தி சிரத்தையோடும். மரபுவழி ஐதீகங்களோடும் நிகழ்த்தப்படுவதனை அவதானிக்கலாம்.

பூநூல் தரித்த ஐயர் ஒருவரைக் கொண்டு நடாத்தப்படும் பிதிர் வழிபாடு பெரும்பாலும் பகல் வேளையிலேயே நடைபெறும். இதனை பகல் 12.00 மணிக்கும் 1.00 மணிக்கும் இடையில் செய்வது உத்தமமாகும். ஒரு மணிக்குப் பின்னர் செய்வது மத்திமமாகும், இரண்டரை மணிக்குப் பின்னர் செய்வது அதர்மமும் ஆகும். எதனையும் உரிய கால வேளையில் செய்வது உத்தமமாகக் கொள்ளப்படும். ஐயர் கும்பம், மடை வைத்து, வீட்டுத் தலைவரைச் சங்கல்ப்பம் வைத்துப் பூசையை ஆரம்பிப்பார். பஞ்ச கௌவியம், எள்ளு, தண்ணீர், ஐந்து அல்லது ஏழு பிண்டம் செய்து மகேஸ்வர பூசை நடைபெறும். படையலும் மகேஸ்வரருக்கே படைக்கப்படும். பூசையின் நிறைவில் ஐயர் சங்கூதி ஆத்மாக்களை வரவேற்பார். சங்கூதிய பின்னர் அரை மணித்தியாலம் வரை வாசல் கதவைச் சிறிது திறந்தவாறு மூடிவிட்டு, எல்லோரும் அமைதியாக வெளியில் அமர்ந்திருப்பர். அரை மணி நேரத்தின் (பல்லி கீச்சிடும்வரை) பின்னர் சகலரும் உள்ளெ சென்று இறுதிப் பூசையில் கலந்து கொள்வர். ஐயர் சங்கூதி ஆத்மாக்களை வெளியே அனுப்புவார். அகால மரணமடைந்த ஆத்மாக்களுக்கு எள்ளு, தண்ணீர், படையல் பொருட்கள் ஆகியவற்றை விளக்குத் திரியுடன் எடுத்துச் சென்று கடப்படியில் வைத்து வழிபடுவர். பின்னர் இறந்த ஆத்மாக்களுக்கு அர்ச்சனைகள் செய்து, பூப்போட்டு, தீபம், தூபம் காட்டி ஆகம விதிப்படி தண்ணீர் தெளித்துப் பூசையை நிறைவு செய்வார். அதன் பின்னர் கும்பம், பிண்டங்கள், எள்ளு, தண்ணீர் ஆகியவற்றை சங்கல்பல் இருந்தவர் எடுத்துச்



சென்று சூரியனைச் சாட்சியாக வைத்து நீர்நிலையில் கரைத்துவிட்டுத் திரும்பி வருவார்.

வந்தாறுமூலையிலும் அதனை அண்டிய சில கிராமங்களிலும் சூரிய வேளாளர் எனப்படும் ஒரு குல மரபு சார்ந்தவர்களைக் கொண்டு பிதிர் வழிபாடு நிகழ்த்தப்படுகின்றது. அவர்களிடம் பிதிர் கடன் வழிபாடு நிகழ்த்துவது தொடர்பான பத்ததி ஒன்றும் உள்ளது. அந்தப் பத்ததியை அடிப்படையாகக் கொண்டு சுலோகங்கள் சொல்லிக் கிரியையினை நிகழ்த்துவார்கள். சூரிய வேளாளர்கள் பிதிர் வழிபாடு நிகழ்த்த வீடுகளுக்குச் செல்லும்போது பத்ததி, சங்கு, செகண்டிவாத்தியம் ஆகியவற்றை எடுத்துச் செல்வார்கள். பத்ததியில் பிதிர் வழிபாடு செய்யும் முறை, மடை வைத்தல், சுலோகங்கள் வசனங்கள், தியான முறை, அர்ச்சனைச் சுலோகங்கள், சங்கதிகள் ஆகியனவும் உள்ளன. பத்ததியின்படி மூன்று மடை வைத்து பக்தி சிரத்தையோடு வழிபாட்டினை நிறைவேற்றுவார்கள்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதேசத்துக்குப் பிரதேசம் சாதி, சமய, குலம், கோத்திர முறைப்படியும், மரபுகள், சம்பிரதாயங்கள் என்பவற்றுக்கு ஏற்பவும் சற்று வேறுபாடுகளுடன் பிதிர் வழிபாடு நிகழ்த்தப்படுவதை அவதானிக்க முடிகின்றது. எவ்வாறு இருந்த போதிலும் அடிப்படையான பல விடயங்கள் இன்றுவரை மாற்றமுறாமல் இருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

*நம்மோடு பல நாள் வாழ்ந்திருந்து*
*நமைவிட்டுப் பிரிந்து இறைபதமடைந்தவர்களின்*
*மரணச் சடங்கினை ஆத்மாக்களின்*
*மோட்சம் வேண்டி*
*உரிய முறைப்படி சுற்றம் சூழ்ந்திருந்து*
*நிறைவேற்றுவோம்*
*மரபுசார் மரணச் சடங்கு நிகழ்வுகள்*

**தொடரும்...**

# வளத்தாப்பிட்டி அ.த.க பாடசாலையின் 55 வருட நிறைவு கலாச்சார நடைபவனி!








**( வி.ரி.சகாதேவராஜா)**

சம்மாந்துறை வலயத்துக்கு உட்பட்ட வளத்தாப்பிட்டி அ.த.க பாடசாலையின் 55 ஆண்டு நிறைவினை ஒட்டி இடம்பெற்ற நடைபவனியும் கலாச்சார விளையாட்டு விழாவும் நேற்று முன்தினம் பாடசாலை அதிபர் ஆர்.தர்சனாத் தலைமையில் இடம்பெற்றது.

கலாச்சார நடைபவனியின்போது பல கண்கவர் நடனங்கள் மற்றும் பலவித நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இந்நிகழ்வில் சம்மாந்துறை கோட்டக்கல்விப்பணிப்பாளர்.ஏ.எல்.அப்துல் மஜித், நாவிதன்வெளி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ப.பரமதயாளன் மற்றும் பாடசாலையின் முன்னைநாள் அதிபர்கள் ஆசிரியர்கள் தற்போது கடமைபுரியும் ஆசிரியர்கள் பெற்றோர்கள் பழைய மாணவர்கள் நலன்விரும்பிகள் என அதிகளவானோர் கலந்து சிறப்பித்தனர். அதிதிகளுக்கு பழைய மாணவர்களால் நினைவு சின்னமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# சிறுபோக நெற் செய்கைக்கான விதைப்பு ஆரம்பம்




**(ஹஸ்பர்)**

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பல பகுதிகளிலும் சிறுபோகத்துக்கான நெற் செய்கை ஆரம்பமாகியுள்ளது. இருந்த போதிலும் உழவுக் கூலி உட்பட நெற் செய்கைக்கான ஏனைய சில பொருட்களும் அதிகரித்துள்ளதனால் தாங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர். தம்பலகாமம் ,முள்ளிப்பொத்தானை கமநல சேவை பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இம் முறை சுமார் 7000 க்கும் மேற்பட்ட ஏக்கர் வயல் நிலங்களில் நெற் செய்கை செய்கை பண்ணப்படுகிறது இதற்காக பலர் உழவு இயந்திரம் மூலமாக பதப்படுத்தி விதைப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

விவசாயிகளுக்கான போதுமான மானிய யூரியா பசளை உள்ளிட்டவற்றையும் கிருமிநாசினிகளையும் நிர்ணய விலையில் பெற்றுத் தர வேண்டும் எனவும் தெரிவிக்கின்றனர்.

# விஷ்ணு ஆலயத்திற்கு பாமா ருக்மணி சமேத விஷ்ணு வெண்கலச் சிலைகள் கையளிப்பு




**( வி.ரி. சகாதேவராஜா)**

அம்பாரை மாவட்டத்தின் மல்வத்தை திருவள்ளுவர் புரம் அருள்மிகு மகாவிஷ்ணு ஆலய கும்பாபிஷேகம் நாளைய தினம்(3) புதன்கிழமை நடைபெறவுள்ளது.

அதனை முன்னிட்டு பாமா ருக்மணி சமேத விஷ்ணு வெண்கலச் சிலைகள் எழுந்தருளிக்காக அன்பளிப்பு செய்யப்பட்டது.

ஆலய நிர்வாகம் கல்முனை சொர்ணம் குழுமங்களின் ஸ்தாபக தலைவர் எம். விஸ்வநாதனிடம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க , அச்சிலைகளை இந்தியாவிலிருந்து தருவித்து அவரே நேற்று நேரில் சென்று கையளித்தார்.

520 கிலோ எடையுள்ள சுமார் ஐந்து லட்சம் ரூபாய் பெறுமதியான இம்மூன்று சிலைகளையும்,

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ இராகிருபேந்திர சர்மா மற்றும் ஆலயத் தலைவர்

கணபதிப்பிள்ளை பாக்கியராசா ஆகியோரிடம் சொர்ணம் விஸ்வநாதன் ஆலய சந்நிதியில் வைத்து கையளித்தார்.

அச்சமயம் கல்முனை சொர்ணம் நகைமாளிகை முகாமையாளர் கோ.குணபாலச்சந்திரன் ,இந்து சமய ஆர்வலர்களான காத்தவராயன், அழகுராஜா, சசிகுமார் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

திருவள்ளுவர்புர மக்களின் அயராத உழைப்பும் ஏனைய மக்களின் ஒத்துழைப்பும் சேர்ந்து நடாத்தும் மகா கும்பாபிஷேகத்தின் வாஸ்து சாந்தி உடனான ஆரம்ப கிரியைகள் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ இரா கிருபேந்திரசர்மாதலைமையில் நேற்று (1) திங்கட்கிழமை ஆரம்பமானது.

இன்று (2) செவ்வாய்க்கிழமை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம் பெறும்.

நாளை (3) புதன்கிழமை மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பேத்தாழை விபுலானந்தா கல்லூரியின் முன்னாள் ஆசிரியர்கள் பழைய மாணவர்களால் கௌரவிப்பு






**(குகதர்சன்)**

கல்குடா வலயத்தின் பாடசாலையான பேத்தாழை விபுலானந்தா கல்லூரியில் கடந்த காலங்களில் கடமையாற்றி ஓய்வு பெற்ற மற்றும், இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கடந்த சனிக்கிழமை (29) குறித்த பாடசாலையில் இடம்பெற்றது.

2000 ஆம் வருட க.பொ.த சாதாரண தர மாணவர்களால் ஏற்பாடு செய்து நடாத்தப்பட்ட இந் நிகழ்வில் அவர்களுக்கு தரம் 1 தொடக்கம் இறுதி வரை கற்பித்த 20 ஆசிரியர்கள் மலர்மாலை அணிவிக்கப்பட்டு, பேண்ட் வாத்திய இசையுடன் வரவழைக்கப்பட்டனர்.

அத்துடன் அவர்களுக்கு கற்பித்த உயிர் நீர்த்த அதிபர்கள், ஆசிரியர்களுக்கும், சக மாணவர்களுக்குமான அஞ்சலி நிகழ்வுடன் இந் நிகழ்வு ஆரம்பமானது.

இந் நிகழ்வில் துரதிஸ்ட வசமாக கலந்து கொள்ள முடியாத ஏனைய ஆசிரியர்களும், தொழில் நிமித்தம் வெளிநாடுகளில் வசிக்கும் பழைய மாணவர்களும் இணையமூடாக இணைந்து தமது கருத்துக்களை பரிமாறியிருந்தனர்.

அத்துடன் இப் பழைய மாணவர்களால் தற்போது பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் ஒரு தொகுதியினருக்கான காலணிகள், புத்தகப் பைகள், கற்றல் உபகரணங்கள் உள்ளிட்ட பொருட்கள் நிகழ்விற்கு அழைக்கபட்ட ஆசிரியர்களின் கரங்களினூடாக வழங்கப்பட்டிருந்தது.

அத்தோடு குறித்த பழைய மாணவர்கள் அவர்கள் கற்ற காலங்களின் ஆசிரியர்களுடன் புகைப்படங்கள் எடுத்துக் கொள்ளும் வாய்ப்பு அமையாத பெரும் குறையினை இந்நிகழ்வின் போது குழுப் புகைப்பட பிரதிகளை ஆசிரியர்களுக்கும் வழங்கி, ஆசிரியர்களின் கரங்களினால் அவர்களும் பெற்று நிவர்த்தி செய்து கொண்டதுடன் ஆசிகளையும் பெற்றுக் கொண்டமை ஓர் நெகிழ்ச்சியான விடையமாக பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அட்டனில் தோழிலாளர் தேசிய சங்கத்தின் மேதின நிகழ்வு





(க.கிஷாந்தன்)

நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசிய சங்கம் நேற்று 59 ஆவது ஆண்டில் காலடி வைக்கின்றது.

தொழிலாளர் தேசிய சங்கமானது 1965 ஆம் ஆண்டு மே முதலாம் திகதி மலையக தொழிற்சங்க துறவியென போற்றப்படும் வெள்ளையனால் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் இருந்து பிரிந்து சென்றே அச்சங்கம் உருவாக்கப்பட்டது. சி.வி. வேலுபிள்ளை உட்பட பல முக்கிய பிரமுகர்கள் மேற்படி சங்கத்தில் அங்கம் வகித்தனர்.

தொழிலாளர் தேசிய சங்கத்துக்கு தற்போது பழனி திகாம்பரம் தலைமை வகிக்கின்றார். தொழிலாளர் தேசிய சங்கம் அதன் அரசியல் கிளையாக செயற்படுகின்றது. தற்போது இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

58 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும், மே தினத்தை முன்னிட்டும் அட்டனில் சிவசுப்பிரமணிய ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. அதன்பின்னர் கட்சி தலைமையகத்தில் கட்சி கொடி ஏற்றப்பட்டு, 'கேக்'வெட்டப்பட்டு கொண்டாட்டம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொது செயலாளர் பிலிப், நிதிச் செயலாளரும், முன்னாள் மத்திய மாகாணசபை உறுப்பினருமான சோ.ஸ்ரீதரன், இளைஞர் அணி தலைவர் பா.சிவநேசன், காரியாலய உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துக் கொண்டனர்.

# சவூதி அரேபிய அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளுக்கு நன்றிகள்



(சில்மியா யூசுப்)

சூடானின் உள்நாட்டுப் போரில் சிக்கித் தவிக்கும் 62 வெளிநாட்டவர்களைச் சேர்ந்த 2148 பேரை மீட்டெடுக்க சவுதி அரேபிய அரசாங்கம் இராப்பகலாக காத்திரமான பல அற்பணிப்புகளை செய்து மீட்டெடுத்துள்ளதையிட்டு திருகொணமலை பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். தௌபீக் நன்றியினை தெரிவித்துள்ளார்.

விஷேட விமானங்கள், விஷேட விமானப்படை விமானங்கள், கப்பல்கள் மூலம் போரில் நிர்க்கதியான வெளிநாட்டவர்களை பாதுகாப்பான முறையில் சவுதி அரேபியாவுக்கு அழைத்து வந்து உணவு மற்றும் மருந்து தங்குமிட வசதிகள் அனைத்தையும் சிறப்பாக ஏற்பாடு செய்து அவரவர் நாட்டு தூதரகங்களுடனும் அவரவர் நாட்டு வெளிநாட்டு அமைச்சர்களுடனும் கலந்தாலோசித்து அவர்களது நாடுகளுக்கு பாதுகாப்பான முறையில் அனுப்பி வைக்க சகல விதமான ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருக்கின்றது என தெரிவித்தார்.

மேலும் அவர் ஊடகத்திற்கு கருத்து தெரிவிக்கையில், உண்மையில் சவுதி அரேபியாவின் இந்த மனிதாபிமான செயல் மிகவும் வரவேற்கத்தக்க சகலராலும் பாராட்டப்படுகின்ற விடயமாகும். சூடானில் நிர்க்கதியான இலங்கையர்களையும் சவுதி அரேபியா பாதுகாப்பான முறையில் சவுதி அரேபியாவுக்கு அழைத்து வந்து அவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தது மட்டுமல்ல, சவுதியில் உள்ள இலங்கைத் தூதரகம் மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோருடனும் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களை இலங்கைக்கு அனுப்பி வைக்க சகல விதமான ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

உடனடியாக நடவடிக்கை எடுத்த சவூதி அரசாங்கத்திற்கு நன்றிகள்,

# போலிஸ் அதிகாரிக்கே கேரளா கஞ்சாவை விற்பனை செய்த நபர்

## பிரபல பெண் பாடசாலைக்கு முன்னால் கைது; காத்தான்குடியில் சம்பவம்





காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காத்தான்குடி நகரிலுள்ள பிரபல பெண் பாடசாலைக்கு முன்னால் கேரளா கஞ்சாவை விற்பனை செய்து வந்த நபரொருவரை (27) காலை பொலிஸ் அதிகாரி ஒருவருக்கே விற்பனை செய்ய முற்பட்ட வேளையில் கையும் மெய்யுமாக கைது செய்யப்பட்டதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய போதைவஸ்த்து ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி எச்.எம்.சியாமுதீன் தெரிவித்தார்.

கிடைக்கப்பெற்ற தகவலொன்றையடுத்து கைது செய்யப்பட்ட நபரின் தொலைபேசி இலக்கத்தைப் பெற்ற போதை ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி குறித்த நபரிடம் 'கஞ்சாவேணும்' எனக் கேட்டுள்ளார். குறித்த பாடசாலைக்கு முன்னால் வருமாறு அவர் கூறவே பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் சென்ற போதை ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி சியாமுதீன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரைக் கொண்டு கேரளா கஞ்சாவை வாங்கும் நிலையிலேயே கையும் மெய்யுமாகக் கைது செய்யப்பட்டுள்ளார். கைதான நபரிடமிருந்து சிறிய பக்கட்டுகளைக் கொண்ட கேரளா கஞ்சா பக்கற்றுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறியின் வழிகாட்டலில் பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் கைது செய்யப்பட்ட நபரை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

# கச்சதீவில் அமைக்கப்பட்டிருந்த புத்தர் சிலை கச்சதீவுக்கு வெளியே செல்லப்பட்டுவிட்டது

## யாழ் குரு முதல்வர்

( வாஸ் கூஞ்ஞ)

புனித அந்தோனியார் திருத்தலம் அமைந்துள்ள கச்சதீல் அமைக்கப்பட்டிருந்த புத்தர் சிலை அகற்றப்பட்டுவிட்டதாக எமக்கு நம்பகரமான செய்திகள் கிடைத்துள்ளன என்பதை தங்களுக்கு அறித்தருகின்றோம் என யாழ்ப்பாணம் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ப.யோ.ஜெயரெட்ணம் அடிகளார் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளருக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக குரு முதல்வர் அருட்தந்தை ப.யோ.ஜெயரெட்ணம் அடிகளார் தனது கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது; புத்தர் சிலை அகற்றப்பட்டதாக கடற்படையின் உயர் அதிகாரிகள் ஆயர் இல்லத்துக்கு அறிவித்துள்ளார்கள். அங்கு அமைக்கப்பட்டிருந்த புத்தர் சிலை அகற்றப்பட்டு கச்சத்தீவுக்கு வெளியே கொண்டுசெல்லப்பட்டுவிட்டதாக அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

கச்சதீவில் புத்தர் சிலை நிறுவப்பட்டுள்ளதாகவும் இவ்விடயத்தில் தாங்கள் கவனமெடுத்து கச்சதீவின் பாரம்பரியமும் தனித்துவமும் பேணப்பட ஆவண செய்யுமாறும் கேட்டு நாம் கடந்த 27.03.2023ல் கடிதமூலம் வேண்டுகோல் விடுத்திருந்தோம். இதற்கமைய தாங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காகவும் ஒத்துழைப்புகளுக்காகவும் எமது நன்றிகதை; தெரிவிக்கின்றோம்.

இவ்விடயத்தை அமைதியான முறையில் தீர்த்துவைக்க ஒத்துழைத்த கடற்படை உயர் அதிகாரிகளுக்கும் மற்றும் கச்சதீவின் பாரம்பரியமும் தனித்துவமும் பேணப்பட குரல் கொடுத்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம் என யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இக்கடிதத்தின் பிரதிகள் யாழ் இந்தியத் துணைத்தூதர் , நெடுந்தீவு பிரதேச செயலாளர் மற்றும் யாழ் ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகைக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

# தென்னை மரங்கள் பாதிப்புகளுக்கு உள்ளாகாதிருக்க விழித்திருங்கள்

## சிங்கிலேயர் பீற்றர்.

( வாஸ் கூஞ்ஞ)

மன்னாரில் வீதியோரங்களிலுள்ள தென்னை மர ஓலைகளில் ஒருவித பூச்சிகள் பற்றிபிடித்து வருவதால் தென்னை மரங்கள் பாதிப்புகளுக்கு உள்ளாகும் நிலை தோன்றுவதாக மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கத்தின் செயலாளரும் ஒய்வு நிலை விவசாய அதிகாரியுமான சிங்கிலேயர் பீற்றர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஒய்வுநிலை விவசாய அதிகாரியான சிங்கிலேயர் பீற்றர் தெரிவிக்கையில் அதாவது வீதியோரங்களில் காணப்படும் தற்பொழுது மன்னாரில் தென்னை மரங்களின் ஓலைகளில் ஒருவிதமான பூச்சிகள் பற்றிபிடித்துக் காணப்படுகின்றது. இவைகள் முதலில் தென் பகுதிகளில்தான் காணப்பட்டன. தற்பொழுது இரண்டு மூன்று மாதங்களாக மன்னாருக்கும் இது பரவத் தொடங்கியுள்ளது.



தனது அவதானிப்பில் தெரிய வருவதாவது தென் பகுதியிலிருந்து மன்னாருக்கு வரும் வாகனங்களில் பணிக்காலங்களில் வாகனங்களில் மேல் பகுதிகளில் இவைகள் தொற்றிக் கொண்டு மன்னாருக்கு வரும் இடங்களில் இவைகள் தென்னை மரங்களின் ஓலைகளில் தொற்றிக் கொள்ளுகின்றன. மன்னாரைப் பொறுத்தமட்டில் இவைகள் பிரதான வீதிகளிலே காணப்படுகின்றது. ஆகவே இந்த தொற்றிக் கொள்ளும் பூச்சிகளை அழிக்க வேண்டுமானால்; மரங்களுக்கு கீழே நெருப்பு பற்றி எரியாதவாறு புகை வரக்கூடியமாதிரி நெருப்பு போட வேண்டும்.



இந்த புகைகள் எழும்பும்போது ஓலைகளிலுள்ள பூச்சிகள் பறக்க ஆரம்பித்து விடும். அத்துடன் இந்த புகைக்கு பூச்சிகள் நெருப்பில் விழுந்து சாகும் நிலையும் உருவாகும் என தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஓலைகளில் பற்றிக் கொண்டுள்ள பூச்சிகளின் குடம்பிகள் இந்த புகைக்கு சாகும் நிலையும் காணப்படுகின்றது.

சிறிய தென்னங்கன்றுகளாக இருக்குமாகில் சோப்பு தண்ணீர் தெளித்தாலும் நல்லது. இதன் ஒரு பூச்சு 100 அல்லது 150 முட்டைகளை இடும் எனவும் கண்டறியப்பட்டுள்ளது. என இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# மன்னாரில் ஆலய வழிபாடுகள் விளையாட்டு நிகழ்வுகளுடன் மே தினம்



( வாஸ் கூஞ்ஞ)

கடந்த ஒரு சில வருடங்களாக நாட்டில் நிலவிவந்த கொரோனா மற்றும் பொருளாதார சிக்கல் காரணமாக மன்னார் மாவட்டத்தில் மே தினம் ஆலய வழிபாடுகளுடன் இடம்பெற்றதொலிய வேறு எந்த நிகழ்வுகளும் இடம்பெறவில்லை.

ஆனால் இவ்வருடம் மன்னார் மாவட்டத்தில் பல கிராமங்கலில் குறிப்பாக அகில உலக கத்தோலிக்க திருச்சபையானது இந்நாளில் தொழிலாளரின் பாதுகாவலராம் புனித சூசையப்பர் தினத்தை நினைவு கூறுவதையிட்டு மன்னார் மறைமாவட்டத்தில் மீனவர்கள் செறிந்து வாழும் பல கிராமங்களில் காலையில் கடற்கரையோரங்களில் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டதுடன் அப்பகுதிகளிலுள்ள மீனவ அமைப்புக்கள் முன்னையப்போன்று பல விளையாட்டு கலை நிகழ்வுகளையும் நடாத்தியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பொருளாதார பிரச்சினைகளை சீர்செய்ய அனைவரும் இணைந்து தீர்வொன்றினை பெற்றுத்தர வேண்டும்

(பாறுக் ஷிஹான்)

தொழிலாளர் தினத்தை ஏனைய நாடுகள் மிக விமர்சையாக கொண்டாடிக்கொண்டு இருக்கின்ற நிலையில் எங்கள் நாட்டில் உள்ள ஊழியர்கள் மிகவும் வறுமையில் உள்ளார்கள்.எனவே நாட்டின் தற்போதைய அசாதாரண சூழலை கருத்தில் கொண்டு ஒற்றுமையாக அனைவரும் தீர்வொன்றை பெற போராட வேண்டும் என கல்முனை பொதுச்சந்தை வர்த்தக சங்க செயலாளர் ஏ.எல்.கபீர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பொதுச்சந்தை வர்த்தக சங்க அலுவலகத்தில் சர்வதேச தொழிலாளர் தினம் தொடர்பில் ஞாயிற்றுக்கிழமை (30) மாலை நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் தனது கருத்தில்;

சர்வதேச தொழிலாளர் தினத்தை தற்போது உலகம் பூராகவும் அனுஸ்டிக்கின்ற நிலையில் எமது நாட்டின் உள்ள நிலைமையினால் அத்தினத்தை மிக விமர்சையாக கொண்டாட முடியாததனால் நாம் கவலை அடைகின்றோம்.அந்த வகையில் எமது நாட்டின் பொருளாதார சிக்கல்களுக்கு மத்தியில் இந்த ஊழியர் தினத்தை அனுஸ்டிக்கின்ற துப்பாரக்கிய நிலைக்கு இந்த நாட்டு மக்கள் தள்ளப்பட்டுள்ள நிலையை பார்க்கின்ற போது மிக வேதனையாக உள்ளது.



எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த நாட்டில் உள்ள ஊழியர்களின் நலனில் அக்கறை கொள்ள வேண்டும். தற்போதைய வாழ்க்கை செலவு ஊழியர்கள் மத்தியில் சிரமங்களை கொடுக்கின்றது.கல்முனை பொதுச்சந்தையானது குறைந்த ஊழியர்களை கொண்டு சிறப்பாக இயங்கிய ஒரு சந்தையாகும். இந்த தொழிலாளர் தினத்தை ஏனைய நாடுகள் மிக விமர்சையாக கொண்டாடிக்கொண்டு இருக்கின்ற நிலையில் எங்கள் நாட்டில் உள்ள ஊழியர்கள் மிகவும் வறுமையில் உள்ளார்கள்.எனவே நாட்டின் தற்போதைய அசாதாரண சூழலை கருத்தில் கொண்டு ஒற்றுமையாக அனைவரும் தீர்வொன்றை பெற போராட வேண்டும்.

இந்த நாட்டின் ஊழியர்களின் நிலைமைகளை கவனத்தில் கொண்டு இந்த நாட்டில் உள்ள சகல பொருளாதார பிரச்சினைகளை சீர்செய்ய இணைந்து தீர்வொன்றினை பெற்றுத்தர வேண்டும் என கல்முனை பொதுச்சந்தையில் இருந்து மிக வினயமாக கேட்டுக்கொள்கின்றோம்.எமது சகோதர்கள் போன்று அவ்வூழியர்களை நாங்கள் பார்த்துக்கொண்டு இருக்கின்றோம்.இந்த ஒற்றுமையான நிலைமையினை கல்முனை பொதுச்சந்தையில் மட்டுமல்லாது நாடு பூராகவும் இவ்வாறான ஒற்றுமை நிலவ வேண்டும் என இறைவனை பிரார்த்திக்கின்றோம். எனவே தான் அனைத்து ஊழியர்களும் நிம்மதியாக வாழஒுணடிளி; அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றேன் என்றார்.

# சித்தி விநாயகர் கலைமன்றத்தின் முத்தமிழ் விழா நிகழ்வுகள்





(த.சுபேசன் )

சாவகச்சேரி-பெரியமாவடி சித்திவிநாயகர் கலை மன்றத்தின் 45ஆவது ஆண்டு விழாவினை முன்னிட்ட முத்தமிழ் விழா நிகழ்வுகளின் தொடக்க நாள் நிகழ்வு 29/04 சனிக்கிழமை பிற்பகல் அரங்க முன்றலில் இடம்பெற்றது.

நிலையத்தலைவர் மு.கதிரவேலு தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் கோவிற்குடியிருப்பு கிராம அலுவலர் ஞானசெயந்தன் தம்பதியினர் மங்கல விளக்கினை ஏற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைத்திருந்தனர்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் அ.சீராளனும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி நகரசபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செல்வராணியும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நிகழ்வில் சிறப்பு நிகழ்வுகளாக செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் நடுவராக கலந்து சிறப்பித்த ''இன்றைய சூழலில் எம்மவர்களின் கொண்டாட்டங்கள் விளைவிப்பது சந்தோசத்தையா? அல்லது சங்கடத்தையா? என்ற தலைப்பிலான பட்டிமண்டப நிகழ்வு,

இசை ஆசிரியை மஞ்சுளா கண்ணன் மற்றும் ஆசிரியர் சி.சிவகரன் வழங்கிய கானமும்-கற்பிதமும் இசை நிகழ்வு, சக்கரம் சமூக அபிவிருத்திக்கான கலை மன்றத்தின் தலை கேட்டான் தம்பி இலக்கிய நாடகம் மற்றும் செம்முகம் ஆற்றுகைக் குழுவின் எண்ணித் துணிவோம் என்ற சிந்துநடை நாடகம் ஆகிய கலை நிகழ்வுகள் இடம் பெற்றிருந்தன.

# அட்டனில் இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் மே தின பேரணியும், கூட்டமும்






(க.கிஷாந்தன்)

இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் மே தின பேரணியும், கூட்டமும் நேற்று ஹட்டனில் நடைபெற்றது.

ஹட்டன் கார்கில்ஸ் புட்சிட்டிக்கு முன்பாக சங்கத்தின் தலைவர் நிஷாந்த வன்னியாராச்சி தலைமையில் ஆரம்பமான மே தின பேரணி, அட்டன் டி.கே. டபிள்யூ மண்டபம் வரை சென்றடைந்தது. அதன்பின்னர் மே தின கூட்டம் நடைபெற்றது. இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் பொதுச்செயலாளர், உப தலைவர் உட்பட அங்கத்தவர்களும், ஏனையோரும் நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

தொழில் பாதுகாப்பு, வாழ்வுரிமை உட்பட மேலும் பல கோரிக்கைகளை முன்னிறுத்தியே மே தின பேரணியும் கூட்டமும் நடைபெற்றது.

# திருக்கேதீஸ்வர ஆலய பரிபாலன சபை தலைவராக ஓய்வுநிலை எந்திரி இராமகிருஷ்ணன் தெரிவு



( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் பாடல்தளமான திருக்கேதீஸ்வர ஆலயத்தின் பரிபாலன சபையின் நடப்பு வருட நிருவாகத் தெரிவில் ஓய்வுநிலை எந்திரி எஸ்.எஸ். இராமகிருஷ்ணன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் மன்னார் பாடல்தளமான திருக்கேதீஸ்வர ஆலயத்தின் பரிபாலன சபையின் நடப்பு வருட நிருவாகத் தெரிவு இடம்பெற்றபோது தலைவராக திரு.எஸ.;எஸ்.இராமகிருஷ்ணன் (ஓய்வுநிலை எந்திரி) , பிரதி தலைவர் திருமதி கைலாசப்பிள்ளை . இணைச் செயலாளர்கள் எஸ்.யு.சந்திரகுமாரன் (மேலதிகப் பணிப்பாளர் நாயகம் பொதுத் திறைசேரி நிதி அமைச்சு) . எஸ்.பிரிந்தாவனன்நாதன் (முன்னாள் மன்னார் நகரசபை உறுப்பினர்) . பொருளாளர்கள் , ஏ.ஐ.தயானந்தராஜ (ஓய்வுநிலை அதிபர்) , கி. சுரேஸ்குமார் (மன்னார் மாவட்ட செயலக பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்) , கே.ஞானேந்திரன் (பட்டயக் கணக்காளர்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# தென்மராட்சிக் கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் கடினப்பந்து துடுப்பாட்ட மற்றும் சதுரங்க போட்டிகள்





(த.சுபேசன்)

தென்மராட்சிக் கல்வி வலயமானது தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் அனுசரணையுடன் முன்னெடுத்த தென்மராட்சியின் முன்னணிப் பாடசாலைகளுக்கு இடையிலான கடினப்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டி மற்றும் சதுரங்கப் போட்டி ஆகியவன்றின் இறுதிப் போட்டிகள் 29/04 சனிக்கிழமை மதியம் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றன.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஜோன்குயின்ரஸ் கலந்து சிறப்பித்திருந்தார்.

மேலும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன்,மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி அதிபர் திருமதி லலிதாமலர்,சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன்,தென்மராட்சி அபிவிருத்திக்கழக செயலாளர் பாலச்சந்திரன்,தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் சர்வதேச விளையாட்டு இணைப்பாளர் ம.சிறீதாசன் மற்றும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன சாவகச்சேரிக் கிளை முகாமையாளர் வி.சுதர்சன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து சிறப்பித்திருந்தனர்.

இதன்போது கடினப்பந்து துடுப்பாட்ட சுற்றுத் தொடரின் இறுதிப்போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மற்றும் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி ஆகிய அணிகள் மோதின.

13பந்துப் பரிமாற்றங்களை கொண்ட மேற்படி போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய டிறிபேர்க் அணி சகல இலக்குகளையும் இழந்து 85ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி ஒரு விக்கெட்டினை மாத்திரம் இழந்து 86ஓட்டங்களை பெற்று தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் மறைந்த உறுப்பினர் யோ.ஜெயக்குமார் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

இதன்போது கடினப்பந்து போட்டியில் முதலாம் இடத்தை பெற்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணிக்கு ஒரு இலட்சம் ரூபாய் பணப் பரிசு மற்றும் வெற்றிக் கோப்பை ஆகியனவும், இரண்டாம் இடத்தை பெற்ற டிறிபேர்க் கல்லூரி அணிக்கு 75ஆயிரம் ரூபாய் பணப் பரிசும், மூன்றாம் இடத்தைப் பெற்ற மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி அணிக்கு ஐம்பதாயிரம் ரூபாய் பணப் பரிசிலும் வழங்கி வைக்கப்பட்டது.

அத்துடன் சதுரங்க போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற அணிகளுக்கும் வெற்றிக் கிண்ணம் மற்றும் பணப் பரிசில் ஆகியன வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கதிர்காமம் ஆடிவேல் விழா பேருற்சவம் யூன் 19 இல் ஆரம்பம்

(வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் கந்தன் ஆலய வருடாந்த ஆடிவேல் விழா பேருற்சவம் ஜுன் 19 இல் ஆரம்பமாகிறது.

கன்னிக்கால் நடும் வைபவம் எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதி இடம்பெறும்.

ஜுன் 19 ஆம் தேதி திருவிழா பெரஹர ஊர்வலம் ஆரம்பமாகி இறுதி ஊர்வலம் பெரஹரா யூலை 03 ஆம் தேதி நடைபெறும் . 2023 வருடாந்த திருவிழா யூலை 4 ஆம் தேதி கதிர்காமம் மாணிக்ககங்கையில்

ஜீவமாலி படகில் நீர் வெட்டு திருவிழாவுடன்( தீர்த்தம்) நிறைவுபெறும் என கதிர்காம தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், இந்து பஞ்சாங்கங்கள் மற்றும் நாட்காட்டிகளில் யூலை 17இல் ஆரம்பமாகி ஆகஸ்ட் 2ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடைய இருக்கின்றது என்று குறிப்பிடப்படுகிறது. புதிய அறிவித்தலின்பிரகாரம் யாழ்ப்பாணம் செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து கதிர்காமம் செல்லும் இலங்கையின் அதிநீண்ட 55 நாட்கள் கொண்ட பாத யாத்திரை ஆரம்பமாகும் திகதி மாறுபடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் நாட்டின் பல பாகங்களில் இருந்து கதிர்காமம் வரை பயணிப்போரின் நடைமுறை மாறுபடவுள்ளது.



# இவ்வருடம் கதிர்காம பாத யாத்திரை
# ஜூன் மாதம் தொடங்குகிறது



**(வருகின்ற ஜூன் மாதம் 19ம் திகதி கதிர்காம கொடியேற்றத்தை பாத யாத்திரையை தொடங்குகிறது)**

இவ்வருட சித்தர்களின் குரல் நண்பர்களின் யாத்திரை ஜூன் 14ம் திகதி புதன்கிழமை உகந்தையில் இருந்து தொடங்குகிறது.

இலங்கை ஒரு பொக்கிஷ புண்ணிய பூமி. போகர் தொடங்கி இமயமலை கிரியா பாபாஜி வரை எத்தனையோ பல்லாயிரம் சித்த ரிஷிகள், யோகிகள், ஞானிகள் அவர்கள் கால் தேயத் தேய முருகனை தரிசிக்க நடந்த பாதை கதிர்காம பாத யாத்திரை காட்டுப்பதை. ஒவ்வொரு வருடமும் 15 நாட்கள் மட்டும் திறக்கப்படும்.

**06/05/2023 : கன்னியாகால் நடும் நிகழ்வு**
**19/06/2023 : கொடியேற்றம், புனித பேழை ஊர்வலம் ஆரம்பம்**
**03/07/2023 : வள்ளி அம்மன் தரிசனம்**
**04/07/2023 : தீர்த்தம் ( நீர்வெட்டு நிகழ்வு)**

உகந்தையில் இருந்து காட்டுக்குள்ளே குமண, குமுக்கன் ஆறு, உப்பாறு, நாவலடி, யால, வள்ளியாற்று பாலம், கட்டகாமம், வீரசோலை வழியாக கதிர்காமத்தை அடைந்து இறையருள் முழுமை பெறும் பயணம்.

ஆதியில் நடந்த சித்த பெரு மக்கள் இங்கே ஆறு இடங்களில் தங்கி ஆறு வகையான சக்திகளை வனத்தில் விட்டு சென்றுள்ளார்கள் என வரலாறு சொல்கிறது.

(1) முதல் நாள் தங்கும் 'வண்ணாத்தி வெட்டை' என்ற கிணத்தடியில் 'கருப்பண்ண சாமி ' என்ற பாலா வடி கறுப்பையும், (14/06/2023 புதன்கிழமை)

(2) இரண்டாவது நாள் தங்கும் 'குமுக்கன் ஆற்றங்கரையில்' வன தேவதைகளான 'காளி' சக்திகளையும், (15/06/2023 வியாழக்கிழமை)

(3) மூன்றாவது நாள் தங்கும் ஆமானுஷ்ய பூமியான 'நாவலடி' வனத்தில் பாதாள 'பைரவ' சக்திகளையும், (16/06/2023 வெள்ளிக்கிழமை)

(4) நான்காவது நாள் தங்கும் 'யாள' ஆற்றங்கரையில் 'நாக' சக்திகளையும்,' (17/06/2023 சனிக்கிழமை)

(5) ஐந்தாவது நாள் தங்கும் 'வள்ளியாற்று' பாலத்தில் 'ஜல தேவதையின்' சக்திகளையும் கடந்து, (18/06 /2023 ஞாயிற்றுக்கிழமை)

(6) ஆறாவது நாள் கதிர்காம மண்ணை அடைய நமக்குள் உள்ள 'ஆறு ஆதார சக்கரங்களும் உயிர் பெற்று' மிக பெரிய யோகியாக உங்கள் உடல் மனம் தயாராகும்..... (19/06/2023 திங்கட்கிழமை)

மனதுக்கு அமைதி தரும் பயணம்...... பல்லாயிரம் பேர் வாழ்க்கையில் தெய்வீக மாற்றத்தை முருக பெருமானே நேரடியாக வந்து வழிநடத்தும் பயணம்...

முருகப் பெருமானின் வழித்தடத்தை ஒற்றி, அகத்தியர், புலத்தியர், காசியப்ப முனிவர், கபில முனிவர், போகர், பாபாஜி, கோரக்கர், அருணகிரிநாதர், யோகர் சுவாமிகள் உட்பட பல சித்தர்களும், முனிவர்களும், யோகிகளும், ஞானிகளும் நடந்து வந்த பாதையில் எமது பாதங்களையும் பதித்து குமனை, யாளை, கட்டகாமம் ஆகிய காடுகளை கடந்து, ஆறு நாட்களாக பாத யாத்திரை சென்று கதிர்காம கந்தனை தரிசிகின்றனர்.

1000 வருட பாரம்பரியமிக்க இந்த புனித பாத யாத்திரையானது ஆன்மீக பயணம் என்பதையும் தாண்டி வாழ்க்கையில் ஒரு புதிய பரிமானத்திற்கே நம்மை கூட்டி செல்கிறது.

இந்தக் கதிர்காம பாதயாத்திரை, தீராத இன்னல்களையும், சொல்லொணா துயரங்களையும், பாரிய பிரச்சினைகளையும் வேண்டுதல்கள் மூலம் தீர்க்கும் அற்புதமான களமாகும்.

தீராத நோய் நொடிகள் தீர அருள் வேண்டி, குழந்தை வரம் வேண்டி, திருமண வரன் வேண்டி, நிம்மதியான வாழ்க்கை வேண்டி, மன நிம்மதி வேண்டி, கல்வி வேண்டி, தொழில் வேண்டி, பதவி உயர்வு வேண்டி, செல்வம் வேண்டி, வீடு வேண்டி, வெளிநாட்டு பயணம் வேண்டி இப்படி எத்தனையோ வேண்டுதல்களை மனம் உருகி முருகப்பெருமானிடம் கேட்கும் களம் இது.

பக்தர்களின் பலவிதமான நேர்த்திக்கடன்களை நிறைவு செய்யும் பாதை இது.

தனது தீராத நோய் தீர்ந்த மகிழ்ச்சியுடன் வயோதிபர்கள், தனக்கு பல ஆண்டுகளின் பின் பிள்ளை வரம் கிடைத்த பெருமிதத்தில் கைக்குழந்தையுடன்



தாய்மார்கள், தடைப்பட்ட திருமணம் நிறைவேறிய நிலையில் ஆனந்தத்துடன் இளம் தம்பதிகள், குடும்ப பிரச்சினைகள் தீர்ந்த மன நிம்மதியுடன் பெரியவர்கள், மகளைக் கரையேற்றிய பேரானந்தத்துடன் பெற்றோர்கள், பரீட்சையில் சித்தியடைந்த குதூகலத்துடன் மாணவர்கள், வெளிநாட்டுப் பயணம் கைகூடிய நிலையில், தொழில் கிடைத்த உற்சாகத்துடன் இளைஞர்கள் இப்படி எத்தனையோ விடயங்களைத் தாங்கி செல்லும் பாதை இது.

இவை மட்டுமா? ஆன்மீக பயணம், பக்தி வழிபாடு என்பதையும் தாண்டி இன்னும் பல விடயங்கள் இப் பாதயாத்திரையில் உள்ளன.

ஏழை, பணக்காரன், உயர்ந்தோர், தாழ்ந்தோர், படித்தவன், படிக்காதவன், தொழிலாளி, முதலாளி என்ற பேதமின்மை, ஏராளமான புதிய நண்பர்களின் அறிமுகம், ஒன்றாக இருந்து உணவு உண்ணுதல், அனைவருக்கும் பகிர்ந்தளித்து உண்ணுதல், ஒருவருக்கு ஒருவர் உதவி செய்யும் மனப்பான்மை, உடல் சுகாதாரம், எளிமை, ஒற்றுமை, கூட்டுப் பிரார்த்தனை, பஜனை வழிபாடு என பல நன்மை பயக்கும் விடயங்களை இந்த பாதயாத்திரை நமக்குக் கொடுக்கிறது.

இவை மட்டுமல்ல! இன்னும் பலவற்றை நாம் பார்த்து, கேட்டு, ரசித்து, உணர்ந்து. அனுபவித்துச் செல்கிறோம். காடு, ஆறு, குளம், களப்பு, வெளி, மலை, சேறு, மணல், தென்றல், கூதல்காற்று, கச்சான்காற்று, மழை, சுட்டெரிக்கும் வெயில், பனி இப்படி இயற்கை நமக்களித்த கோடை இங்கே கொட்டிக் கிடக்கிறது.

அழகிய மலைகள், வெளிகள், காடுகளைப் பார்த்து ரசித்து, காட்டு மூலிகைகளைத் தழுவி வரும் ஆறுகளில் குளித்து, சுத்தமான நல்ல காற்றை சுவாசித்து, மூலிகைகள் நிறைந்த காற்றை உடலில் படச் செய்து, புல் தரைகளிலே, ஆற்று மணலிலே, மரங்களின் கீழே படுத்து உறங்கி, காட்டிலே தேவாமிர்தமாகக் கிடைத்த உணவை அளவாக உண்டு மகிழ்ந்து, பறவைகளின் கீச்சொலிகளைக் கேட்டு, இறைவனின் நாமத்தை எந்நேரமும் உச்சரித்து, இந்த உணர்வுகளை எல்லாம் அனுபவித்து, அசைபோட்டு... அப்பப்பா! எத்தனை மனநிறைவான விடயங்கள்.

நாம் வாழும் சூழலில், நகரத்தில் எள்ளளவும் எண்ணிக் கூடப் பார்க்க முடியாத அத்தனையும் இந்த பாத யாத்திரை மூலம் நமக்குக் கிடைக்கிறது.

பணமும், பதவியும், புகழும், சுகமும் மட்டுமா வாழ்க்கை? அதை விட நாம் பெற வேண்டியவை எத்தனையோ உள்ளன என்பதை உணர்த்தும் யாத்திரை இது.

போலியாக, நிழலாக வாழும் எமக்கு உண்மையை, நிஜத்தைக் காட்டும் இந்தப் பாத யாத்திரையின் பேரானந்தத்தை அனுபவிக்க வேண்டுமென்றால் கதிர்காமத்திற்கு ஒரு முறையாவது பாதயாத்திரை செல்ல வேண்டும்.

மொத்தத்தில் ஒரே வார்த்தையில் சொன்னால் முருக பெருமானே நேரடியாக பயணத்தில் அனைவரையும் அழைத்து செல்கிறான். இது மட்டும் சத்தியம்....

எல்லாம் அவனுக்கே வெளிச்சம்.....

இதுதான் இந்த பாத யாத்திரையின் மூல ரகசியம்.... ஒரு காடுகளையும் கடக்கும் போது, ஒவ்வொரு இரவும் ஒவ்வொரு இடத்திலும் தங்கும் போதும், அங்குள்ள பிரபஞ்ச சக்தி, தேவதா சக்தி நம் உடலில் மாற்றத்தை ஏற்படுத்தும். முறையாக இந்த ரகசியங்களை எல்லாம் உணர்ந்து பயணியுங்கள்.....

ஓம்-நமசிவாய-சரவணபவ-சிவாயநம-ஓம்
ஓம்-நமசிவாய-சரவணபவ-சிவாயநம-ஓம்
ஓம்-நமசிவாய-சரவணபவ-சிவாயநம-ஓம்

மேலதிக தகவல்களுக்கு,

**தலைவர் - ஆதித்தன் (+94 77 313 8048)**
**துணைதலைவர் - மனோகரன் (+94 77 119 2223)**
**இது சுற்றுலா பாதை அல்ல.... யாத்திரை.**



